**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.**

**பொருள் எண்– 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/UGSS-2/2018 நாள்.12.11.2018ன் படி நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து கட்டிடங்களில் சேகரமாகும் கழிவு நீரினை பதப்படுத்தி Fecal sludge and septage management திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு செய்து விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் **(FSTP)** இந்நகராட்சிக்கு சொந்தமான 8 ஏக்கர் பரப்பளவு கொண்ட புதிதாக போகநல்லூர் உரக்கிடங்கில் 40KLD அளவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) **ரூ.400.00** இலட்சத்திற்கு **( ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) 2018–2019ம் ஆண்டிற்கு தமிழக அரசு பங்களிப்புத்தொகை ரூ.134.00+ ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) 2019–2020ம் ஆண்டிற்கு தமிழக அரசு பங்களிப்புத்தொகை ரூ.134.00+ தூய்மை இந்தியா திட்டம் (SBM) இந்திய அரசு பங்களிப்புத்தொகை ரூ.132.00)** அமைக்க நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணியினை இந்நகராட்சி மூலம் மேற்க்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4026/2018/இ1)**

**தீர்மானம் எண். 263**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 2**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் தகுதிபெற்ற பணியாளர்களுக்கு 2018–2019ம் அண்டிற்கு தேவையான சீருடைகள், சீருடைகளுக்கான தையற்கூலி மற்றும் மகப்பேறு உதவியாளர்களுக்கு சீருடைப்படி வழங்கிடவும், பொறியியல் பிரிவு ஒட்டுநர் மற்றும் பொது சுகாதாரப்பிரிவு ஒட்டுநர்கள், துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள், ஷீக்கள் அரசு சார்வு நிறுவனங்களில் வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். /2018/எச்1)**

**தீர்மானம் எண். 264**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 3–265**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் பார்வை 2ல் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளபடியும், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, கடையநல்லூர் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் உள்ள 33 இடங்களில் தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர்சவ்வூடுபரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 33 இடங்களில் ரூ.594.00 இலட்சம் (ரூபாய் ஐநூற்றி தொன்னூற்று நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில்

இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும் மற்றும் நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கவும் திட்டமிட்டு நிறுவுவதற்கு இந்நகர் மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் நகரில் உள்ள 33 வார்டுகளில் உள்ள 33 இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) தனியார் தொழில் நிறுவனங்கள்/தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய எதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் " Expression of Interest " விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய எதுவாக 22.11.2018 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பட்டுள்ளது. மேலும் ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை.

Aqua Engineers and consultants India Private.Ltd,
No.5 LGP Complex, 1st floor, near Porur Toll Plaza , off 200 feet Byepass road,
Vanagaram,
Chennai- .600095

இத்திட்டமானது பொதுமக்களுக்காக தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும் மற்றும் நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியின் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தொழில் நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், 29.11.2018 அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டு அதன் விலை விகிதத்தினை மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| SI. No | Description | Rate to be remitted to the Municipality | Rate to be charged for sale to public | Rate be charged for sale to public (Rs/1 Ltr from chilling machine |
|---|---|---|---|---|
| | Establishment of 1000 Ltr / Hr.Capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in 16 location of Kadayanallur Municipality. | Rs.1.00 / 20 litres sold at plant site<br><br>Rs.2.00 /20 lities skid at the door step | Rs.7.00 / 20 litires sold at plant site<br><br>Rs.20.00 -20 litres sold at door step | Rs.1.00 for 1 litre water sold on vending machine |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் கொடுத்துள்ள Aqua Engineers and consultants India Private.Ltd,No.5 LGP Complex, 1st floor, near Porur Toll Plaza , off 200 feet Byepass road, Vanagaram,Chennai- .600095 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் உள்ள 16 இடங்களில் முதற்கட்டமாக தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவும் பணியினை மேற்க்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3997 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 265</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 4–266**

திட்ட இயக்குநர் (Mission Director) தேதிய சுகாதார இயக்குநரகம், சென்னை அவர்களின் கடித எண்.4943/NUHM/SHS/2015 நாள்.02.09.2015ன் படி இந்நகராட்சிப் பகுதியில் புதிதாக பொது சுகாதார மையம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 டவுன் சர்வே வார்டு D, பிளாக் 12 டவுன் சர்வே எண்.2 பழைய சர்வே எண்.234B/2 பாகம் அரசு புறம்போக்கு நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதாரமையம் ரூ.50,00,000/– மதிப்பீட்டில் அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.435, நாள்.30.09.2015ல் அனுமதி வழஙகியுள்ளது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களிடம் தடையில்லா சான்று (NOC) வழஙக கேட்டு கடிதம் அனுப்பட்டதில் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். எ2/63255/2015, நாள்.15.12.2016ம் தேதிய கடிதத்தில் நகர்புற சுகாதார மையம் அமைக்க ஏதுவாக வேறு நிலத்தினை தேர்வு செய்து புதிய விண்ணப்பம் அளிக்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் இரண்டாவது கட்டமாக இந்நகராட்சி பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு வார்டு எண்.5 கிருஷ்ணாபுரம் சர்வே வார்டு D, பிளாக் 31 டவுன் சர்வே எண்.206, 207 (பழைய சர்வே எண்.24/பாகம்) அரசு புறம்போக்கு பாட்டை நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு தடையில்லா சன்று (NOC) வழஙக கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் , திருநெல்வேலி அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.3575/2015/இ1, நாள்.13.03.2017ன்படி கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்தது. இந்நிலையில் வார்டு எண்.5ல் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் மேற்காணும் இடத்தில் புதிதாக நகர்புற சுகாதார மைய கட்டிடம் கட்ட கூடாது எனவும் அந்த இடம் எஙகள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது எனவும் எதிர்ப்பு போராட்டஙகளும் நடைப்பெற்றதால் கோட்டாட்சித் தலைவர், தென்காசி அவர்கள் நேரில் வருகை புரிந்து பேச்சுவார்த்தை நடைபெற்றதில் அப்பகுதி பொதுமக்கள் எஙகள் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இறப்பு நடைபெறும் போது அவர்களின் ஈமச்சடஙகு மற்றும் காரியஙகள் நடைபெறுவதால் அவ்விடத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்ட கூடாது என்று தொடந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் கோட்டாச்சித் தலைவர் அவர்கள் வேறு இடம் தேர்வு செய்து புதிதாக சுகாதார மையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையில் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் டெஙகு காய்ச்சலின் தாக்கம் தொடர்ந்து இருந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடந்து மேற்க்கொள்ள இந்நகராட்சிக்கு கூடுதலாக புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க திட்ட இயக்குநர் (Mission Director) தேதிய சுகாதார இயக்குநரகம், சென்னை அவர்களின் கடித எண்.4943/NUHM/SHS/2015 நாள்.02.09.2015ன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் உடன் நகராட்சிப்பகுதியில் தகுதியான இடத்தினை தேர்வு செய்து புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் இந்நகராட்சிப்பகுதியில் புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க தகுதியான இடத்தினை தேர்வு செய்து கொண்டிருந்த நிலையில் வார்டு எண்.5ல் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் அப்பகுதியில் நகர்புற சுகாதார மையம் வருவதால் ஏற்படும் நன்மைகளை கருத்திற்கொண்டு கிருஷ்ணாபுரம் சர்வே வார்டு D, பிளாக் 31 டவுன் சர்வே எண்.206, 207 (பழைய சர்வே எண்.24/பாகம்) அரசு புறம்போக்கு பாட்டை நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்டிடம் கட்ட ஆட்சேபணை ஏதும் இல்லை என கடிதம் சமர்பித்துள்ளனர். அதனடிப்படையில் மேற்காணும் பகுதியில் ரூ.50,00,000/– மதிப்பீட்டில் புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/–(ஐம்பது இலட்சம் மட்டும்)க்கு அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) மேற்காணும் பணிக்கு அரசு மான்யமாக ரூ.42,00,000/– (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் சமர்பிக்கப்படுகிறது.

ஆ) மேற்காணும் பணிக்கு கூடுதலாக ஆகும் செலவுத் தொகை ரூ. 8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)யை இந் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக சமா்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3575/2015/இ1)**

**தீர்மானம் எண். 266**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 5–267**

இந்நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பெரியார் ஆற்றுப்படுகையிலிருந்து infiltration gallery மூலமாக குடிநீர் சேகரம் செய்யப்பட்டு 450mm RCC குழாய் மூலமாக இந்நகராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேல் நிலை தொட்டிகள் மூலம் மூன்று நாளுக்கு ஒருமுறை வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகின்றது. இத்திட்டமானது 1973 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்நிலையில் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பெரியாற்று படுகையிலிருந்து infiltration gallery-க்கு வரும் குடிநீரானது வடிகட்டாமல் கலங்கலாக வரப்படுவதாக புகார் தெரிவித்துள்ளார். மேற்காணும் திட்டம் அமைக்கப்பட்டு 45 ஆண்டுகள் ஆகிவிட்டதாலும் infiltration gallery -க்கு வரும் குடிநீர் சேகரிப்பு குழாய்கள் மிகவும் பழுதடைந்து விட்டபடியால் புதிய குடிநீர் திட்டம் ஒன்றினை பெரியாற்று படுகையில் அமைத்து இந்நகராட்சிப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தரமான குடிநீர் விநியோகம் செய்யவும் அதற்கான செலவீனத் தொகையினை அரசிடமிருந்து பெற்று செயல்படுத்த அங்கீகாரம் வேண்டி சமா்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிக்கான திட்ட பிரேரணைய தயார் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நிறவனங்களில் Consultant ஒருவரை நியமனம் செய்யவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4659/2018/இ1)**

**தீர்மானம் எண். 267**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 6–268**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.14 அல்லிமூப்பன் கிழக்குத்தெருவில் ரூ.800000/– உத்தேச மதிப்பீட்டில் பேவர்கல் தளம் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.96 நாள்.29.06.2016 அன்று அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 20.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குவைான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. APMAகாஜா ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்தக்காரா் மூலம் பணியினை தொடங்கி முடிவுறும் தருவாயில் அப்பகுதி பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவினை காட்டிலும் கூடுதலாக மதிப்பீட்டுத் தொகை ரூ.800000/–யை காட்டிலும் கூடுதலாக ரூ.1,89,390/–க்கு பணிகள் மேற் கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆகவே அவசர அவசியம் மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு கூடுதலாக ரூ.1,89,390/–யை ஏற்கனவே மேற்காணும் பகுதியில் பேவர்கல் சாலை அமைக்கும் பணியினை மேற்கொண்ட திரு. APMAகாஜா ஒப்பந்தகாரா் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகையினையும் வழங்க அங்கீகாரம் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2269/2016/இ1)**

**தீர்மானம் எண். 268**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 7– 269**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.7 வடக்குவா செல்வி அம்மன் கோவில் தெரு மற்றும் வார்டு எண்.22 கண்ணார் தெரு ஆகிய இடங்களில் உள்ள வாறுகால் சேதமடைந்து மழைநீர் மற்றும் கழிவுநீர் சீரக செல்லாமல் தேங்கியுள்ளது. இதனால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் ரூ.26000/– மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.G.முப்புடாதி ஒப்பந்தக்காரர் மூலம் மேற்காணும் இரண்டு பழுது நிக்க பணிகளையும் மேற்க்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியின் அவசர அவ.யிம் மற்றும் அத்தியவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் **06.10.2018** அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். /2018/இ1)**

**தீர்மானம் எண். 269**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 8–270**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்களில் சேரும் மக்கும் குப்பைகள் மற்றும் இந்நகராட்சி பெரியாற்று தலைமை பணியிடத்தில் சேரும் மக்கும் குப்பைகளை அப்பகுதிகளிலேயே உரக்குடில்கள் அமைத்து உரம் தயாரிக்க வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு கீழ்காணும் பகுதிகளில் உரக்குடில்கள் அமைக்க அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மேலக்கடையநல்லூர் பூங்கா
2. மாவடிக்கால் பூங்கா
3. சேர்ந்தமரம் ரோடு பூங்கா
4. பெரியாற்று தலைமை பணியிடம்

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள பகுகுதகளில் சேரும் மக்கும் குப்பைகளை அப்பகுதியிலேயே உரக்குடில்கள் அமைத்து உரம் தயாரிக்க இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.P. சாகும்கமீது ஒப்பந்தக்காரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்க்கொள்ள இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பகுதிகளில் உரக்குடில்கள் அமைக்கப்பட்டதற்கும் அதற்கான செலவீனத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். /2018/இ1)**

**தீர்மானம் எண். 270**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 9–271**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.15 பரசுராமபுரம் தெற்கு தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் ரூ.500000/– உத்தேச மதிப்பீட்டில் பேவர்கல் தளம் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.413 நாள்.30.09.2015 அன்று அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 20.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. O.Sஅசன்மைதீன் ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்தக்காரர் மூலம் பணியினை தொடங்கி முடிவுறும் தருவாயில் அப்பகுதி பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவினை காட்டிலும் கூடுதலாக மதிப்பீட்டுத் தொகை ரூ.500000/–யை காட்டிலும் கூடுதலாக

ரூ.1,25,000/—க்கு பணிகள் மேற் கொள்ளும் நிலை ஏற்ப்பட்டது. ஆகவே அவசர அவசியம் மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு கூடுதலாக ரூ.1,25,000/—யை ஏற்கனவே மேற்காணும் பகுதியில் பேவர்கல் சாலை அமைக்கும் பணியினை மேற்கொண்ட திரு. O.Sஅசன்மைதீன் ஒப்பந்தகாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகையினையும் வழங்க அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2269/2016/இ1)**

**<u>தீர்மானம் எண். 271</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்— 10—272</u>**

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள 30.00 HP Vertical Turbine Pump ஆற்று படுகையில் உள்ள Gallery well-ல் இயங்கி வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பகுதியில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக மகுளி சகதிகள் 30.00 HP Vertical Turbine Pump—க்குள் சென்று Pump Roap shaft முழுவதும் தேய்ந்து மோட்டாரினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மேற்காணும் மோட்டாரினை மேலே தூக்கி புதிய Top Shaft Rupper push, Grand push மாற்றி மோட்டாரிலுள்ள பம்பினை சர்வீஸ் செய்து இயக்க வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,13,200/—க்கு (GST—12% உட்பட) அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் மூலம் நேரடியாக விலைப்புள்ளிப் பெற்று குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**<u>தீர்மானம் எண். 272</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்— 11—273</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினி ஆட்டோ எண்.TN76 P9292 வாகனத்திற்கு புதிய டயர்கள் பொருத்துவதற்கு மன்றத்தின் பின்னேற்பினை எதிர்சோக்கி தனி அலுவலர் அவர்கள் 05.10.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 10.10.2018 அன்று நேரடி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | பாப்புலர் டயர்ஸ்,<br>173/B யூனியன் ஆபிஸ் அருகில்,<br>கடையநல்லூர் 627751. | ரூ.27500/— |
| 2. | சன் டயர்ஸ்,<br>903, யூனியன் ஆபிஸ் அருகில்,<br>கடையநல்லூர் 627751. | ரூ.29000/— |
| 3. | நடராஜன் மோட்டார்ஸ் ஒர்க்ஸ்,<br>1A, பழைய பேருந்து நிலையம் ரோடு,<br>தென்காசி 627 811. | ரூ.29500/— |

1. வரப்பெற்ற மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.27500/— கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட பாப்புலர் டயர்ஸ், 173B, யூனியன் ஆபிஸ் அருகில் கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு டயர்கள் வாங்குவதற்கு அங்கீகாரத்திற்காக

2. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 05.10.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் டயர்கள் வாங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4232/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 273</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 12–274</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76 E4129 வாகனத்திற்கு புதிய டயர்கள் பொருத்துவதற்கு மன்றத்தின் பின்னேற்பினை எதிர்சோக்கி தனி அலுவலர் அவர்கள் 26.10.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 14.11.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | பாப்புலர் டயர்ஸ்,<br>173/B –1 மெயின் ரோடு<br>கடையநல்லூர். | ரூ.11425/– |
| 2. | சன் டயர்ஸ்,<br>903, ரோடு எண்–11,<br>கடையநல்லூர். | ரூ.11600/– |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.11425/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட பாப்புலர் டயர்ஸ், 173B, யூனியன் ஆபிஸ் அருகில் கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு டயர்கள் வாங்குவதற்கு அங்கீகாரத்திற்காக.
2. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 26.10.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் டயர்கள் வாங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4516/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 274</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 13–275</u>**

இந்நகராட்சி பகுதிகளில் பன்றி காய்ச்சல் நோய் பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தொற்று நோய் கிருமிகள் பரவாமல் இருக்க LYSOL கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு LYSOL 500ML *72 எண்ணம் திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் 0.2181 நிறுவனத்தின் மூலம் வாங்கிடவும் இதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.7500/–க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் தனி அலுவலர் அவர்கள் 15.11.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் LYSOL 500ML *72 எண்ணம் திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் 0.2181 நிறுவனத்தின் மூலம் வாங்கிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4641/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 275</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 14–276**

இந்நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு தினசரி 110 DCB பணியாளர்கள் வார்டுகளில் பணி செய்து வருகிறார்கள். இவர்கள் ஆய்வு செய்த நாட்களை கட்டிடங்களில் குறிப்பிடும் விதமாக 52 வார நாட்கள் (ஒரு வருடம்) அடங்கிய நாட்குறிப்பை பதிவு செய்யும் விதிமாக STICKERS 32000 எண்ணமும், மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு SMILEY STICKERS 32000 எண்ணம் பிரிண்ட் செய்திட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4064/2018/எச்1)**

**தீர்மானம் எண். 276**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 15–277**

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் இந்நகராட்சியில் 2016–17ம் ஆண்டிற்கான ஆண்டுக்கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அதன் அறிக்கைகள் டைப் செய்து 6 பிரதிகள் ஒளி நகல் எடுத்து பைண்டிங் செய்த வகைக்கு ஆன செலவுத் தொகை ரூ.9190/– (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நூற்றி தொண்ணூறு மட்டும்) வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு

**(ந.க.எண். 4260/2018/அ3)**

**தீர்மானம் எண். 277**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 16–278**

இந்நகராட்சி வார்டு எண்.17 அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தெற்கு தெருவில் சத்துணவுக்கூடம் அருகில் உள்ள காலியிடத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டுக்கு குத்தகைக்கு விடுவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.181 நாள்.20.08.2018ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன் பேரில் மேற்படி இனத்திற்கு 16.10.2018 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறை, திருநெல்வேலி வழியாக தமிழ் முரசு நாளிதழில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்படி விளம்பரத்தினை தொடர்ந்து இவ்வினத்திற்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை. அதனைத் தொடர்ந்து இவ்வினத்திற்கு 14.11.2018 அன்று இரண்டாவது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கேட்கப்பட்ட ஏலக் கேள்விகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் / முகவரி | மாதவாடகை/ ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு.R.முருகேசன்,<br>S/o, ராமசாமி,<br>17/39, வானுவர் பிள்ளையர் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர் | ரூ.1650/– |
| 2. | திரு.S.கணேசன்,<br>S/o, சண்முகவேல்,<br>91, செல்வ விநாயகர் கோவில் தெரு,<br>நெடுவயல், செங்கோட்டை தாலுகா. | ரூ.1760/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.கணேசன் என்பவரின் உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.1760/– அரசாங்க மதிப்பு ரு.1700/–ஐ விட கூடுதலாக உள்ளது என வருவாய் ஆய்வர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே அன்னாரின் உச்ச ஏலக்கேள்வியினை ஒப்புக்கொண்டு திரு.கணேசன் என்பவருக்கு 03.12.2018 முதல் 30.11.2019 வரை குத்தகை உரிமம் வழங்க அங்கீகாரத்திற்காக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**(ந.க.எண். 3421/2018/அ3)**

**தீர்மானம் எண். 278**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–17–279</u>**

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுபடுத்த பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நிலவேம்பு குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் பள்ளி மாணவர்களுக்கு வருடம் முழுவதும் தொடர்ந்து வழங்க ந.க.எண்.2571/2017/J1 நாள்.16.11.2018ல் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

நிலவேம்பு பொடி மாவட்ட சித்தா மருத்துவமனை தென்காசியில் இருப்பு இல்லாததாலும் மற்றும் திருநெல்வேலி டாம்கால் நிறுவனத்தில் போதிய அளவு இருப்பு இல்லாததாலும், பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி அவசியத்தை முன்னிட்டு 400 கிலோ நிலவேம்பு பொடி Managing Director, Tampeol, Anna Hospital Campus, Arumbakkam, Chennai–156 அரசு நிறுவனம் மூலம் வாங்கிடவும் மற்றும் இதற்கான செலவுச் தொகை ரூ.1,26,840/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3778/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 279</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 18–280</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஏற்படும் சில்லறை செலவினங்களை எதிர்கொள்ள துப்புரவு அலுவலர் அனுமதியுடன் ரூ.1000/–வரை ஒருதடவைக்கு செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 280</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 19–281</u>**

இந்நகராட்சி அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் 2018ம் ஆண்டிற்க்கு தேவைப்படும் பதிவேடுகள், படிவங்கள், எழுதுபொருட்கள், கணிணிக்கு தேவையான பொருட்கள், டோனர்கள் மற்றும் ரசீது புத்தகங்கள் ஆகியன வாங்கி வழங்க வேண்டியுள்ளதால் அரசு சார்பு கூட்டுறவு நிறுவனமான சிதம்பரனார் மாவட்ட பிரிண்டர் சர்வீஸ் இன்டேல் கோ.ஆப்.சொசைட்டி நிறுவனம் கோவில்பட்டி என்ற அரசு சார்பு நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி விலைபட்டியல் 11.07.2018ல் உள்ள விலைப்புள்ளியும், தற்போது 20.09.2018ல் தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் மற்றும் சர்வீஸ் இன்டேல் கோ.ஆப் சொசைட்டி லிமிடேட் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியும் ஒப்புநோக்கியதில் சமமாகவே உள்ளது. எனவே மேலும் 6 மாத காலத்திற்கு தேவையான எழுதுபொருட்கள் தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் மற்றும் சர்வீஸ் இன்டெல் கோ.ஆப் சொசைட்டி லிமிடேட் மூலம் வாங்கி வழங்குவதற்கான அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4114/2017/பி2)**

**<u>தீர்மானம் எண். 281</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 20–282</u>**

இந்நகராட்சியின் அலுவலக கட்டிடம் மற்றும் மேல்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்சக்தி பேனல் போர்டு அனைத்து பிரிவுகளிலும் இயங்கி வரும் கணினிகள், அவை சார்ந்த பிரிண்டர்கள், இண்டர்நெட் மோடம், UPS மின் இணைப்பு மற்றும் மழைகாலங்களில் அடிக்கடி நிகழும் இடி மின்னல்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏதும் ஏற்படாதவாறு பாதுகாப்பதற்கு இடிதாங்கி (Lishting

Arrester) இந்நகராட்சி மேற்கூரையில் அமைப்பதற்கு ஆகும். உத்தேத செலவீனத் தொகை ரூ.3,60,000/– க்கு தனி அலுவலரின் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2707/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 282</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 21–283</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 08.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில்ரூ. | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2018–19 | | | | |
| 1. | கடையநல்லூர் நகராட்சி . வார்டு எண். 25 இல்லத்தார் வடக்குத்தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | இந்நகர்மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018 | 9.90/– | திரு.M.மாலையப்பன்<br>திருமதி.A.பரமேஸ்வரி | 0.04% குறைவு<br>0.09% அதிகம் |
| 2. | கடையநல்லூர் நகராட்சி . வார்டு எண். 27 சிவாஜி நகரில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | இந்நகர்மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018 | 9.98/– | திரு.M.மாலையப்பன்<br>திருமதி.A.பரமேஸ்வரி | 0.04% குறைவு<br>0.09% அதிகம் |
| 3. | கடையநல்லூர் நகராட்சி . வார்டு எண்.13 ஆசாத்தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | இந்நகர்மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018 | 9.90/– | திரு.M.மாலையப்பன்<br>திருமதி.A.பரமேஸ்வரி | 0.04% குறைவு<br>0.09% அதிகம் |
| 4. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.23 கிருஷ்ணன் கோவில் தெற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | இந்நகர்மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018 | 9.98/– | திரு.M.மாலையப்பன்<br>திருமதி.A.பரமேஸ்வரி | 0.04% குறைவு<br>0.09% அதிகம் |
| 5. | கடையநல்லூர் நகராட்சி, வார்டு எண்.2 விசாலாட்சி அம்மன் கோவில் ஊரணி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | இந்நகர்மன்ற தீர்மான எண்.258 நாள்.22.10.2018 | 9.98/– | திரு.M.மாலையப்பன்<br>திருமதி.A.பரமேஸ்வரி | 0.04% குறைவு<br>0.09% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு சதவீதத்திலும் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்திலும் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண். 354/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 283</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 22–284**

இந்நகராட்சிப் பகுதியில் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 06.10.2018 அன்று சிறப்பு முகாம் நடத்தி பொதுமக்களிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டது. மேற்படி விண்ணப்பங்களில் தகுதிப்பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அவசர இணைப்பு (Tatkal Connection) கட்டணமாக ரூ.2000/- யினை இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தி உடனடியாக இணைப்பு பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கவும், மேற்படி விபரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் உள்ளூர் நாளிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவுத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1410 /2018/இ2)**

**தீர்மானம் எண். 284**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 23–285**

இந்நகராட்சிப் பகுதியில் 6 எண்ணம் இயற்கை நுண்உரக்குடில்கள் (micro compost centre) அமைக்கும் பணிகள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் மேலக்கடையநல்லூர் பழைய உரக்கிடங்கு பகுதியில் ஒன்றும் தேர்வு செய்யப்பட்டு பணிகள்முன்னேற்ற நிலையில் உள்ளது. இப்பகுதியில் அமையவிருக்கும் நுண்உரக்குடில் (micro compost centre) நிலத்தில் சுமார் 2.5 மீட்டர் உயரத்திற்கு குப்பை மேடாக உள்ளது. எனவே இக்குப்பை கூழங்களை அகற்றிவிட்டு Original crround level–ல் இருந்து தான் இயற்கை உரக்குடில் அமைக்கும் பணிகள் செய்ய முடியும். மேலும் குப்பை கூழங்களை அகற்றும் பணிகள் முடியும். மேலும் இக்குப்பை கூழங்களை அகற்றும் பணிகள் செய்வதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை என்பதால் இதனை பொது நிதியின் கீழ் மேற்க்கொள்வதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

அ) மேலும் நகராட்சிப் பகுதியில் இயற்கை நுண்உரக்குடில் அமைக்கும் பணிகள் அரசு திட்டபணியாக இருப்பதாலும் இப்பணியினை உடனடியாக மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டியுள்ளதை கருத்திற் கொண்டும் அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்காணும் பகுதியில் நுண்உரக்குடில் அமைக்கும் ஒப்பந்தக்காரர் திரு.M.மாடசாமி ஒப்பந்தக்காரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

ஆ) அரசு திட்டபணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327 /2018/இ1)**

**தீர்மானம் எண். 285**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 24–286**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி “தமிழக அரசின் ஒராண்டு சாதனைகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை விளக்கும் பொருட்டு தினபூமி நாளிதழின் தொழில் மலர்–2018 புத்தக வடிவில் வெளியிட உள்ளதால், இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெறவிருக்கும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினபூமி தொழில் மலர்–2018 புத்தக வடிவில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1326 /2018/இ1)**

**தீர்மானம் எண். 286**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 25–287**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் தென் பக்க நுழைவு வாயில் அருகில் உள்ள காலியிடத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டுக்கு குத்தகைக்கு விடுவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.181 நாள்.20.08.2018ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன் பேரில் மேற்படி இனத்திற்கு 16.10.2018 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறை, திருநெல்வேலி வழியாக தமிழ் முரசு நாளிதழில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்படி ஏல நாளில் இவ்வினத்திற்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை. இதனைத் தொடர்ந்து இவ்வினத்திற்கு 14.11.2018 அன்று இரண்டாவது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட கேட்கப்பட்ட ஏலக் கேள்விகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் / முகவரி | மாதவாடகை/ ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு.ச.விக்னேஷ்,<br>38,பாரதி நகர்,<br>மேலகரம்,தென்காசி | ரூ.3200/– |
| 2. | திரு.ஸ்ரீ ராம் சரவணன்,<br>த/பெ சுடலைமுத்து,<br>12, 3வது தெரு,<br>விவேகானந்தர் ரோடு,<br>தென்காசி. | ரூ.3500/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு. ஸ்ரீ ராம் சரவணன்,என்பவரின் உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3500/– அரசாங்க மதிப்பு ரூ.2500/–ஐ விட கூடுதலாக உள்ளது என வருவாய் ஆய்வர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே அன்னாரின் உச்ச ஏலக்கேள்வியினை ஒப்புக்கொண்டு திரு. ஸ்ரீராம் சரவணன், என்பவருக்கு 03.12.2018 முதல் 30.11.2019 வரை குத்தகை உரிமம் வழங்க அங்கீகாரத்திற்காக. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு

**(ந.க.எண். 3421 /2018/அ3)**

**தீர்மானம் எண். 287**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 26–288**

தென்காசி சப்கோர்ட்/ மாவட்ட நீதிமன்ற நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.ஜோன்ஸ் அவர்களுக்கு கீழ்கண்ட விபரப்படி 2013 முதல் 2018 முடிய அன்னாரல் ஆஜரான வழக்குகளுக்கு வழங்கப்பட வேண்டியவ முக்கறிஞர் கட்டணம் சார்பாக பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி பட்டியலில் உள்ள விபரப்படி வழக்கு பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதில் இத்தொகை வழங்கப்பட வேண்டியது என அறியவருவதால், அன்னாருக்கு ரூ.31250/– வழங்கவும் மேலும் முன் அனுமதி பெற்று இத்தொகை வழங்கியமைக்கும் மன்றம் இசைவு வழங்கலாம்.

| வ.எண் | வழக்கு எண் | தொகை |
|---|---|---|
| 1. | OS.No. 215/13 | 3375 |
| 2. | AS.No. 014/15 | 3375 |
| 3. | OS.No. 032/17 | 0875 |
| 4. | OS.No. 530/15 | 3375 |
| 5. | OS.No. 109/15 | 3375 |
| 6. | OS.No. 141/17 | 3375 |
| 7. | AS.No. 061/16 | 3375 |

| | | |
|---|---|---|
| 8. | OS.No. 100/18 | 3375 |
| 9. | AS.No. 050/18 | 3375 |
| 10 | AS.No. 074/18 | 3375 |
| | **TOTAL** | **31250** |

**(ந.க.எண். 4849/2018/அ1)**

**தீர்மானம் எண். 288**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 27–289**

இந்நகராட்சியில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பெரியாறு தலைமை குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு குடிநீர் திட்டங்கள் மூலம் குடிநீர் பெறப்பட்டு வரப்படுகின்றது. இத்திட்டங்களில் மூலம் பெறப்படும் குடிநீரின் அளவுகளை துல்லியமாக கணக்கிட குடிநீர் அளவு மணி பொருத்தி தருமாறு இளநிலை பொறியாளர் தனது 22.10.2018ம் தேதியில் அறிக்கை சமர்பித்துள்ளார். அதனடிப்படையில் தாமிரபரணி குடிநீர் திட்டத்தில் முத்துக்கிருஷ்ணாபுரம், கிருஷ்ணாபுரம் மற்றும் குமந்தாபுரத்திற்கு செல்லும் 100mm GI மெயின் குழாய், மேலக்கடையநல்லூர் தீயணைப்பு நிலையம் அருகிலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, இந்திரா நகருக்கு செல்லும் 150mm GI மெயின் குழாய், கிருஷ்ணாபுரம், குமந்தாபுரம் செல்லும் 80MM GI மெயின் குழாய் மற்றும் பெரியாற்று தலைமை குடிநீர் திட்டத்தில் 450MM GI மெயின் குழாய், மாவடிக்கால், இக்பால்நகர் பகுதிக்கு செல்லும் 100MM GI மெயின் குழாய் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் மெயின் குழாயில் குடிநீர் அளவு மணிகளை பொருத்தவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.932000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

மேற்காணும் குடிநீர் பணிகளுக்கான அளவு மணிகளை பொருத்துவதற்கு தகுதிப்பெற்ற நிறுவனங்களிடம் நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று மதிப்பீடுகள் தயார் செய்யவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1326 /2018/இ1)**

**தீர்மானம் எண். 289**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 28–290**

இந்நகராட்சி கல்விநிதி தலைப்பின் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்ர்பக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்தும் பொருட்டு Smart Class Room அமைக்கும் பணிக்கு. | ரூ.7.90/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – பேட்டை நகராட்சி நடு நிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் பொருட்டு வகுப்பறைகளில் செராமிக் எழுது பலகைகள் அமைக்கும் பணிக்கு. | ரூ.0.50/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி –பேட்டை நகராட்சி நடு நிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்வி திறன் மற்றும் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு பள்ளிவளாகத்தினை சுற்றிலும் கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணிக்கு. | ரூ.2.50/– |

**(ந.க.எண். 4171 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 290</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 29–291</u>**

இந்நகராட்சி கல்விநிதி தலைப்பின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – மேலக்கடையநல்லூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் பொருட்டு Smart Class Room அமைக்கும் பணிக்கு. | ரூ.7.90/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – மேலக்கடையநல்லூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கல்விதிறன் மற்றும் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு பள்ளி வளாகத்தினை சுற்றிலும் கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணிக்கு. | ரூ.2.50/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் பொருட்டு வகப்பறைகளில் செராமிக் எழுது பலகைகள் அமைக்கும் பணிக்கு. | ரூ.0.50/– |

**(ந.க.எண். 4171 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 291</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 30–292</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 27.03.2017ம் தேதிய நேரடி ஆய்வு கூட்ட நடவடிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் விபரப்படி உள்ள 8 எண்ணம் குடிநீர் விநியோகம் பணிகளுக்கு Gas Chlorination Plant அமைக்கப்பட்டுள்ளது.

1. கடையநல்லூர் நகராட்சி – பேட்டை மலம்பாட்டை ரோடு 3.65 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
2. கடையநல்லூர் நகராட்சி வாரசந்தை வளாகம் 7.00 இலட்சம் லிட்டர் குடிநீர்மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
3. கடையநல்லூர் நகராட்சி இக்பால் நகர் 2.70 இலட்சம் லிட்டர் குடிநீர்மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
4. கடையநல்லூர் நகராட்சி மாவடிக்கால் 5.40 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
5. கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் தீயணைப்பு நிலையம் அருகிலுள்ள பொறியாளர் குடியிருப்பு 7.00 இலட்சம் லிட்டர் குடிநீர்மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
6. கடையநல்லூர் நகராட்சி மேலக்கடையநல்லூர் இந்திரா நகர் 1.60 இலட்சம் லீட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
7. கடையநல்லூர் நகராட்சி தாமிரபரணி நீரூந்து நிலையம் உள்ள மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி
8. கடையநல்லூர் நகராட்சி தலைமை பணியிட நீரூந்து நிலையம் (பெரியாற்று படுகை) உள்ள குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி.

மேற்காணும் விபரப்படி உள்ள வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள Gas Chlorination Plant–க்கு தேவையான Gas Chlorination Cylinder சராசரியாக நாள் ஒன்றிற்கு 8 எண்ணம் பிளாண்டுக்கு 27Kg வீதம் மாதம் ஒன்றிற்கு 810Kg (8சிலிண்டர்கள்) வீதம் ஒரு வருடத்திற்கு 9720Kg (810X12மாதம்) கிலோ 97 சிலிண்டர்கள் தேவைப்படுகின்றன. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற் கொண்டும் ஒரு வருடத்திற்கு Gas Chlorination Cylinder வெளி மார்கெட்டிலிருந்து வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,31,000/–க்கு (ஒரு வருடத்திற்கு 97 சிலிண்டருக்கு X9600/–) அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். /2018/இ1)

<u>தீர்மானம் எண். 292</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 31–293</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 27.03.2017ம் தேதிய நேரடி ஆய்வு கூட்ட நடவடிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் விபரப்படி உள்ள 7 குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் விநியோகம் பணிகளுக்கு Gas Chlorination Plant அமைக்கப்பட்டுள்ளது.

1. கடையநல்லூர் நகராட்சி – குமந்தாபுரம் 0.80 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
2. கடையநல்லூர் நகராட்சி – குமந்தாபுரம் 0.90 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
3. கடையநல்லூர் நகராட்சி –கிருஷ்ணாபுரம் மெயின் 4.50 இலட்சம் லிட்டர் குமந்தாபுரம் 0.90இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
4. கடையநல்லூர் நகராட்சி –கிருஷ்ணாபுரம் பார்க் 2.70 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
5. கடையநல்லூர் நகராட்சி இடைநிலை நீருந்து நிலையம் (Booster) 4.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி
6. கடையநல்லூர் நகராட்சி இடைநிலை நீருந்து நிலையம் (Booster) 6.75 இலட்சம் லீட்டர் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.
7. கடையநல்லூர் நகராட்சி முத்துக்கிருஷ்ணாபுரம் 2.4 இலட்சம் லிட்டர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி.

மேற்காணும் விபரப்படி உள்ள வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள Gas Chlorination Plant–க்கு தேவையான Gas Chlorination Cylinder சராசரியாக நாள் ஒன்றிற்கு 7 எண்ணம் பிளாண்டுக்கு 25Kg வீதம் மாதம் ஒன்றிற்கு 750Kg (8சிலிண்டர்கள்) வீதம் ஒரு வருடத்திற்கு 9000Kg (750X12மாதம்) கிலோ 90 சிலிண்டர்கள் தேவைப்படுகின்றன. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற் கொண்டும் ஒரு வருடத்திற்கு Gas Chlorination Cylinder வெளி மார்கெட்டிலிருந்து வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.8,65,000/–க்கு (ஒரு வருடத்திற்கு 90 சிலிண்டருக்கு X9600/–) அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மானம் எண். 293</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 32–294</u>**

கடையநல்லூர் நகராட்சியில் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை 2017–2018ம் ஆண்டு தணிக்கை தடையில் மூன்றாவது நிதிக்குழு ஆணையின்படி நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்கு அரையாண்டு சொத்துவரி குறைந்தபட்சம் குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை தணிக்கை தடையில் தெரிவிக்கப்பட்டதன் படியும், சென்னை தலைமை கணக்காயர் தணிக்கை அறிக்கையின்படியும் இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள கட்டிடங்களுக்கும், புதிய கட்டிங்களுக்கும் குறைந்த பட்சம் அரையாண்டு சொத்துவரியை ரூ.100/–என நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3565 /2018/அ1)**

**<u>தீர்மானம் எண். 294</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 33–295</u>**

சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி அவர்களிடம் இந்நகராட்சிப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நேரடியாக சென்று தங்கள் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து தர வேண்டுமென தொடந்து புகார்கள் கொடுத்து வந்தனர். இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி அவர்கள் நேரில் இந்நகராட்சிப்பகுதிக்கு வருகை தந்து வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் ஆய்வு செய்த போது சாலைகளின் தன்மை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்காணும் சாலைகளை உடன் செப்பனிட்டு பொதுமக்களின் சிரமத்தினை போக்கிட கோரியுள்ளார். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையில் நகராட்சிப் பகுதிகளில் மிகவும் மோசமான பகுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள சாலைகளையும் செப்பணிட தேவையான நடவடிக்கைகள் மேற்க்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். இந்நிலையில் கீழ்காணும் விபரப்படி உள்ள சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP)-2012-2013ன் கீழ் சாலைபணிகள் அமைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் |
|---|---|
| 1. | வார்டு எண்.1 குமந்தாபுரம் பள்ளிக்கூடம் தெரு, ஆதிதிராவிடர் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 2. | வார்டு 2 கிருஷ்ணாபுரம் கிழக்கு ரத வீதி முதல் ரயில்வே பீடர் ரோடு வரை மற்றும் மிட்டா ஆபீஸ் தெரு தார்தளம் அமைத்தல் |
| 3. | வார்டு 3 கிருஷ்ணாபுரம் வ.உ.சி. தெரு, தார்தளம் அமைத்தல் |
| 4. | வார்டு 4 செவல்விளைத் தெரு, பிள்ளையார்கோவில் தெற்குத்தெரு மற்றும் ஓடை தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |

| | |
|---|---|
| 5. | வார்டு 5 கிருஷ்ணாபுரம் பள்ளிக்கூடம் தெரு மற்றும் கிருஷ்ணன் கோவில் தெரு , பேச்சியம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 6. | வார்டு 6 முத்துகிருஷ்ணாபுரம் சேனையர் தெரு மற்றும் மங்கம்மாள் சாலை தார்தளம் அமைத்தல் |
| 7. | வார்டு. 7 முத்துகிருஷ்ணாபுரம் முத்தாரம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 8. | வார்டு. 8 , நாட்டாண்மை தெரு தார்தளம் அமைத்தல் |
| 9. | வார்டு 9 இல்லத்தார் வடக்கு தெரு மற்றும் இல்லத்தார் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 10. | வார்டு 10 பள்ளிவாசல் தென்வடல் தெரு மற்றும் காளியம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 11. | வார்டு 11 தந்தை பெரியார் தெரு, பிள்ளையார் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 12. | வார்டு 12 கல்வத்நாயகம் தெரு, தார்தளம் அமைத்தல் |
| 13. | வார்ட 13 அல்லிமூப்பன்தெரு கிழக்கு பகுதி, குசவன்குன்று தென்வடல் தெரு மற்றும் இக்பால் நகர் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 14. | வார்டு 14 அல்லிமூப்பன் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 15. | வார்டு 15 பரசுராமபுரம் வடக்குத் தெரு, மற்றும் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 16. | வார்டு 16 பெரிய தெரு கீழ்பகுதி, மற்றும் புதுத் தெரு தார்தளம் அமைத்தல் |
| 17. | வார்டு 17 முப்புடாதியம்மன் கோவில் தெரு மற்றும் புதூர் பள்ளிக்கூடம் தெரு தார்தளம் அமைத்தல் |
| 18. | வார்டு 18 அய்யாபுரம் தெற்கு தெரு மற்றும் முப்புடாதியம்மன் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 19. | வார்டு 19 கலந்தர் மஸ்தான் தெரு, மற்றும் அல்லிமூப்பன் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 20. | வார்டு. 20 அட்டக்குளம் தெரு மற்றும் பெரிய தெரு மேல்பகுதி தார்தளம் அமைத்தல் |
| 21. | வார்டு 21 காளியம்மன் கோவில் தென்வடல் தெரு, கிருஷ்ணன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 22. | வார்டு 22 கடகாலீஸ்வரர் சன்னதி தெரு மற்றும் இந்திரா நகர் புதுக்காலனி தெரு தார்தளம் அமைத்தல் |
| 23. | வார்டு 23 ஆதிதிராவிடர் தென்வடல் தெரு, நாடார் தெரு தார்தளம் அமைத்தல் |
| 24. | வார்டு 24 மாதாங்கோவில் தெருக்கள் மற்றும் தென்டவல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 25. | வார்டு 25 இல்லத்தார் தெரு, பஜனைமடம் தெரு மற்றும் கற்பகசுந்தர விநாயகர் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 26. | வார்டு 26 காமாட்சியம்மன் கோவில் தெரு மற்றும் மலம்பாட்டை தெரு தார்தளம் அமைத்தல் |
| 27. | வார்டு 27 தெற்கு ரதவீதி, கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 28. | வார்டு 28 பேட்டை சந்தை தெரு மற்றும் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |

| | |
|---|---|
| 29. | வார்டு 29 மதினா நகர் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 30. | வார்டு 30 பேட்டை ரைஸ்மில் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 31. | வார்டு 31 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு மற்றும் அழகுமகுதணன் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 32. | வார்டு 32 ரகுமானியாபுரம் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 33. | வார்டு 33 கொழும்புச் செட்டியார் தெரு, மற்றும் மகாராஜபுரம் தெரு தார்தளம் அமைத்தல் |
| 34. | பண்பொழி ரோடு (புதிய பேருந்து நிலையம் முதல் நகராட்சி பூங்கா வரை) தார்தளம் அமைத்தல் |
| 35. | கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு ஆஞ்சநேயர் கோவிலிருந்து ரயில்வே ஸ்டேசன் வரை தார்தளம் அமைத்தல் |
| 36. | சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு காளியம்மன் கோவில் முதல் நகராட்சி எல்கை வரை தார்ச்சாலை அமைத்தல். |

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1முதல் 36 வரையுள்ள தெருக்களில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுதிட்டம் 2012–2013ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ஊழல் முறைகேடு நடைபெற்றதாக தனிநபர் மூலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருநெல்வேலி அவர்களுக்கு புகார் அளிக்கப்பட்டு அதன்பேரில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருவதால் இச்சாலைகளில் அபிவிருத்தி பணிகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

மேற்படி நிலையில் வரிசை எண்.1முதல் 36 வரையுள்ள தெருக்களில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுதிட்டம் 2012–2013ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் ரூ.21.41 கோடி மதிப்பீட்டில் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டும் பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புளை மாற்றியமைத்ததால் சாலைகள் மிகவும் சேதமுற்று குண்டும் குழியுமாக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத ஆபத்தான நிலையில் உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி அவர்களின் கோரிக்கைக்கு இணங்கவும் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையில் தெரிவித்துள்ளபடியும் மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1முதல் 36 வரையுள்ள சாலைகளை அரசிடமிருந்து நிதி பெற்று செப்பனிட தேவையான நடிவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு தனிஅலுவலரின் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

மேலும் வரிசை எண்.1முதல் 36 வரை ஆபத்தான நிலையில் உள்ள சாலைகளை செப்பனிட அரசிடமிருந்து நிதி பெற்று தேவையான நடிவடிக்கைகள் மேற்க்கொள்ளவதற்கு தடையில்லாச்சான்று **(NOC)** வழங்க கேட்டு இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3937/2018/இ1)**

**தீர்மானம் எண். 295**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனிஅலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**